Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **STC 383/2025** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **சுப்புராஜ்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**
**05.05.2026**

**முதல் விசாரணை**:

1. நான் பாலவநத்ததில் குடியிருந்து ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை கடந்த ஒன்றரை வருடத்திற்கு முன்பு நானும், ராமர் என்பவரும் பாலவநத்ததில் உள்ள பாண்டி டீக்கடைக்கு முன்பு டீ குடித்து கொண்டிருந்தபோது டீக்கடை அருகே நடந்த சண்டை தொடர்பாக போலீசார் வந்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது என்னிடமும், ராமரிடமும் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் இருவரும் செய்து கொடுத்தோம். **( பார்வை மகஜர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். என்னுடன் சேர்ந்து சாட்சி கையொப்பம் செய்த ராமர் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு

மேற்படி ஆவணத்தில் செய்தேன் என்றால் மாலை 04.30 மணியளவில் கையொப்பம் செய்தேன், தேதி நினைவில் இல்லை. பாண்டி டீக்கடை பாலவநத்ததில் இல்லை என்றால் சரியல்ல, பாலவநத்தம் முக்கில் உள்ளது. புகார்தாரர் செல்வம் எனக்கு பழக்கமா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜரில் கையெழுத்து செய்துவிட்டு புகார்தாரர் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**